**வாசிக்க: எசேக்கியல்** 3:17-21

**கர்த்தர் தம் ஊழியகாரரை ஆத்துமாக்களின் காவலாளியாக நியமிக்கிறார்.**

மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன், நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான், அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான், நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய். அப்படியே, நீதிமான் தன் நீதியை விட்டுத் திரும்பி, நீதிகேடு செய்யும்போதும், நான் அவன்முன் இடறலைவைக்கும்போதும், அவன் சாவான், நீ அவனை எச்சரிக்காதபடியினாலே அவன் தன் பாவத்திலே சாவான், அவன் செய்த நீதிகள் நினைக்கப்படுவதில்லை, அவனுடைய இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன். நீதிமான் பாவஞ் செய்யாதபடிக்கு நீ நீதிமானை எச்சரித்தபின்பு அவன் பாவஞ்செய்யாவிட்டால், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் எச்சரிக்கப்பட்டான், நீயும் உன் ஆத்துமாவைத் தப்புவித்தாய் என்றார்.

**கேள்வி**:

நான் கர்த்தரின் எச்சரிக்கையை மற்றவர்களுக்கு சொல்லாமலிருந்து, அந்த மனிதர் அவர்களுடைய துன்மார்க்கத்திலே மரித்தால், அதற்கு நான் எப்படி பொறுப்பேற்கமுடியும்?

**பதில்**:

அருமையான தேவபிள்ளையே, தேவனுக்கடுத்த காரியங்களை செய்ய கோடான கோடி தூதர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். மனிதர்கள் ஏங்கிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர் ஒரு சிலரை மட்டுமே தம் பிள்ளைகளாக தெரிந்து கொண்டு, தம் சுபாவங்களை தருகிறார். நம் கண்முன்னே ஒருநபர் குழிக்குள்ளே விழப்போகிறார் என அறிந்தும் நாம் காப்பாற்றவில்லையென்றால் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று சொல்லும் தகுதியை இழந்து விடுகிறோம். அதை நாம் உணர்ந்து செயல்படவே தேவனாகிய கர்த்தர் நம்மை கணக்கு கேட்பேன் என சொல்கிறார். அநேகநாட்களுக்கு முன் யாரோ ஒரு தேவபிள்ளை இந்த எச்சரிக்கையை நமக்கு (அ) நம் மூதாதையருக்கு சொன்னபடியாலே இன்று நாம் தேவபிரசன்னத்தை அனுபவித்து கொண்டிருக்கிறோம். ஆதலால் நாம் இப்போ அதை திருப்பி செலுத்த கடனாளிகளாக இருக்கிறோம். அருமையான தம்பி தங்கச்சி நாம் பெற்ற இந்த இரட்சிப்பை குறித்து வாய்ப்பு கிடைக்கும் போது பகிர்ந்து கொண்டு ஆத்துமாக்களை மரணத்தில் இருந்து தப்புவிப்பாயா..?

நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள், நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும், இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள் என்றார்கள். 2 இராஜாக்கள் 7 :9

**ஜெபம்**

பரலோக பிதாவே! ஒரே பேறான குமாரனை எங்களை மீட்டுக்கொள்ள பரத்திலிருந்து அனுப்பி வைத்தீங்களே நன்றியப்பா. இப்பூமியில் இருக்கும் நாம் பிறர் தேவனை அறியாது அழிந்து போகாதபடி. நாங்கள் அவர்களுக்கு சுவிஷேசம் சொல்ல கற்றுத்தாங்கப்பா. ஆமென்